தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

சித்திரை 7, யுவ - திருவள்ளுவர் ஆண்டு 2026

1995, ஏப்ரல் 20, வியாழக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"அமைந்தாங் கொழுகான் அளவறியான் தன்னை
வியந்தான் விரைந்து கெடும்."

மற்றவர்களோடு ஒத்து நடக்காமலும், தன்னுடைய வலிமையின் அளவு இவ்வளவுதான் என்று அறியாமலும், தன்னைத்தானே பெரிதாக எண்ணிக் கொண்டு செயல்படுபவர் விரைவில் அழிந்து கெடுவர். *(மேசையைத் தட்டும் ஒலி)*

1. வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள். வினா எண் 361, டாக்டர் வெ. சரோஜா, மாண்புமிகு சட்ட அமைச்சர்.*

361—

சங்ககிரியில் நீதிமன்றக் கட்டிடங்கள் கட்டுதல்

***25686—டாக்டர் வெ. சரோஜா:**

மாண்புமிகு சட்ட அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்ககிரியில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

[*1995 ஏப்ரல் 20*

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டப்படும்?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி, சட்ட அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : சேலம் மாவட்டம் சங்ககிரியில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டிடங்கள் கட்டும் செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளதாக உயர்நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

டாக்டர் வெ. சரோஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம், டாக்டர், புரட்சித் தலைவியின் பொற்கால ஆட்சியில்தான், ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டிடங்கள் கட்டப்பட்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சிறப்பாகச் செயல்பட்டு, துறை மிகவும் சிறப்பாக செயல்புரிந்து வருவதை நாட்டு மக்கள் நன்கு அறிவர். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டிடத்தை கட்டுவது பற்றி. உயர்நீதிமன்றத்தோடு பேசி, இந்த ஆண்டே செயல்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய ஒப்பற்ற தமிழக முதலமைச்சர் மாண்புமிகு டாக்டர், புரட்சித் தலைவி அவர்களுடைய விழுமிய ஆட்சியில்தான் இன்றைக்கு நீதித்துறை ஒரு புதிய மறுமலர்ச்சியை உருவாக்கி இருக்கிறது. ஒரு புதிய பொற்காலத்தை உருவாக்கி இருக்கிறது. கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும், 1993-94 மற்றும் 1994-95 ஆகிய இரண்டு நிதி ஆண்டுகளில் மட்டும், திட்டச் செலவின் அடிப்படையில் 25 கோடி ரூபாய்களை ஒதுக்கி, அந்தப் பணிகள் தமிழ்நாட்டிலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மொத்தம் 14 நீதிமன்றக் கட்டிடங்களும் 63 நீதிபதிகளுக்கான குடியிருப்புகளும் 25 கோடி ரூபாயிலே கட்டும் பணி நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. வருகின்ற 1995-96-வது ஆண்டிலேயும் பல திட்டங்களை எடுக்க இருக்கிறோம். இதுவரையிலேயும் 25 கோடி ரூபாய்க்கு அனுமதி அளித்திருக்கிறார்கள். வருகிற ஆண்டிலே மேலும் பல நீதிமன்றக் கட்டிடங்களை எடுக்க இருக்கிறோம். அதற்கு சென்னை உயர்நீதிமன்றத்தினுடைய ஒப்புதலை எதிர்பார்த்துக்*

கொண்டிருக்கிறோம். அது வந்தபிறகு, சங்ககிரியிலே இருக்கிற சப் கோர்ட், டிஸ்ட்ரிக்ட் முன்சீப் கோர்ட், ஜுடிசியல் மேஜிஸ்ட்ரேட் கோர்ட், இவைகள் எலலாம் இணைந்து, ஒருங்கிணைந்த நீதிமன்றமாக அமைய இந்த அரசு நிச்சயமாக முயற்சியை மேற்கொள்ளும்.

டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர்நீதி மன்றத்தின் பரிசீலனையில் உள்ளது என்று அறிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நீதித்துறையில் உள்ள அனைத்து பிரிவுகளும் மிகவும் பழுதடைந்த பழைய கட்டிடங்களில் இயங்கி வருவதால், என்னுடைய தொகுதி மக்களின் நீண்டகால கோரிக்கையை நிறைவேற்றும் வண்ணம், சங்ககிரி, இடைப்பாடி, திருச்செங்கோடு மற்றும் அதன் சுற்றுப்புறத்தில் உள்ள 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் பயன் அடையும் வண்ணம், இந்த ஆண்டே நடைமுறைப்படுத்த, அரசு முழு முயற்சிகளோடு பணிகளை மேற்கொண்டு இவ்வாண்டே கட்டித்தர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே நான் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். கடந்த இரண்டு ஆண்டுக்காலத்தில், மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் 25 கோடி ரூபாய் ஒதுக்கி, 77 திட்டங்களை 14 நீதிமன்றக் கட்டிடங்கள் மற்றும் 63 நீதிபதிகளின் இல்லங்களைக் கட்டுகின்ற அந்தப் பணியிலே ஈடுபட்டு இருக்கிறோம். இந்த ஆண்டு சில நீதிமன்றக் கட்டிடங்களைக் கட்டப் போகிறோம். அப்போது நிச்சயமாக சங்ககிரி இடம் பெறும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய மேலான கவனத்திற்கு உங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 362, திரு. கே. முனிவெங்கடப்பன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

362—

தருமபுரி மாவட்டத்தைப் பிரித்தல்.

24800*—திரு. கே. முனிவெங்கடப்பன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—